DITTO WS

Reg. No. : ..................................

Name : ......................................

# SY-512

## SECOND YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2023

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**(1 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் 1 வீதம்)**

**(8 × 1 = 8 மதிப்பெண்கள்)**

1. திரு. கைலாஷ் சத்யார்த்திக்கு எந்த சேவைக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.

   (அ) சுற்றுச்சூழல் பிரச்சினை

   (ஆ) வரதட்சிணை பிரச்சினை

   (இ) குழந்தைத் தொழிலாளர் பிரச்சினை

   (ஈ) போதை ஒழிப்புப் பிரச்சினை

2. எந்த விளையாட்டு வீரரின் பிறந்த தினம் தேசிய விளையாட்டு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

   (அ) தியான்சந்த் (ஆ) டெண்டுல்கர்

   (இ) மாரியப்பன் (ஈ) விஸ்வநாதன் ஆனந்த்

3. ‘வாழும் வள்ளுவம்’ என்ற நூலிற்காக சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர்

(அ) மாலன் (ஆ) வா.செ. குழந்தைசாமி

(இ) ஆர்னிகா நாசர் (ஈ) க. முருகேசன்

4. ஐவகை நிலங்களுள் ஒன்று

(அ) தில்லை (ஆ) நிலன்

(இ) வான் (ஈ) முல்லை

5. ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து வருவது.

(அ) எழுத்து (ஆ) தொடர்

(இ) மரபு (ஈ) பெயர்

6. ‘பசித்தவர்கள் பக்கம்’ என்ற கவிதையின் ஆசிரியர்

(அ) கவிஞர் சமயவேல் (ஆ) மு. சுயம்புலிங்கம்

(இ) கவிஞர் பழனிபாரதி (ஈ) இவர்களுள் எவருமில்லை

7. சிலப்பதிகாரம் குறிப்பிடும் பதினொரு வகைக் கூத்துகளில் இல்லாத ஒன்று.

(அ) பாவை (ஆ) கொடி

(இ) குடி (ஈ) அல்லியம்

8. ‘தமிழே நீ ஒரு பூக்காடு நானோர் சிறு தும்பி’ என்று கூறிய கவிஞர்.

(அ) வாணிதாசன் (ஆ) சுப்புரத்தின தாசன்

(இ) பாரதிதாசன் (ஈ) கண்ணதாசன்

9. ‘இறை’ என்பதன் பொருள்

(அ) வரி (ஆ) பரி

(இ) உணவு (ஈ) இவற்றுள் எதுவுமில்லை

10. ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ !

என்ற வரி இடம் பெறும் நூல்.

(அ) அகநானூறு (ஆ) ஐங்குறுநூறு

(இ) பழமொழி நானூறு (ஈ) புறநானூறு

**(11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம்.)** **($6 \times 2$ = 12 மதிப்பெண்கள்)**

11. கேரளச் சமூக மறுமலர்ச்சிக்காகச் சமூகப் பணியாற்றிய இரு சமூகச் சீர்திருத்தவாதிகளின் பெயர்களை எழுதுங்கள்.

12. ‘சேர நாடு’ சிறு குறிப்பு எழுதுங்கள்

13. பேராசையின் பரிசு என்ற கதையில் இடம் பெறும் இரண்டு தொம்பாக்களின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.

14. கீழே தரப்பட்டுள்ள தமிழ்க் கணினிக் கலைச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களை எழுதுங்கள்.

(அ) INTERNET

(ஆ) LAPTOP

15. உங்களுக்குத் தெரிந்த விவசாயத்தோடு தொடர்புடைய இரு பழமொழிகளின் பெயர்களை எழுதுங்கள்.

16. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(அ) சோழ நாடு வயல்வளம் மிக்க நாடு

(ஆ) சேர நாடு சோறுடைத்து என்றழைக்கப்பட்டது

(இ) காவிரி ஆற்றினை உழவர் பெருமக்கள் கடவுளுக்கும் மேலாகக் கருதினர்

17. வானிலையை முன்பே தெரிவிக்கும் இரண்டு விலங்குகளின் பெயர்களை எழுதுங்கள்.

18. ‘விண்ணப்பம்’ என்ற கவிதையில் பேசப்படும் சீர்கேடுகளில் இரண்டினை எழுதுங்கள்.

**(19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 4 வீதம்)**

**($5 \times 4 = 20$ மதிப்பெண்கள்)**

19. சரியானவற்றைப் பொருத்தி எழுதுங்கள்.

(அ) உயிர்களின் பரிணாம வளர்ச்சி – மாலன்

(ஆ) ஐம்பெரும் பூதங்கள் – புறநானூறு

(இ) வலைக்குள் வலை – தொல்காப்பியர்

(ஈ) வித்வான் – ஆர்னிகா நாசர்

20. பாட்டையாவின் பண்பு நலன்கள் குறித்து எழுதுங்கள்.

21. கீழே தரப்பட்டுள்ளவைகளைக் குறித்து விளக்கி எழுதுங்கள்.

(அ) மக்கத் தாயம் (மக்கள் தாயம்)

(ஆ) மருமக்கத் தாயம் (மருமக்கள் தாயம்)

22. ‘உடற் பயிற்சியினால் ஏற்படும் நன்மைகள்’

என்ற தலைப்பில் வானொலி உரை தயார் செய்யுங்கள்.

23. கீழே தரப்பட்டுள்ள பாடலை நயம் பாராட்டி எழுதுங்கள்.

“தச்சன் செய்த சிறுமாவையம்

ஊர்ந்து இன்புறார் ஆயினும் கையில்

ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல”

- குறுந்தொகை

24. கீழ்வரும் பகுதியைத் தூயத் தமிழ்ப்படுத்தி எழுதுங்கள்.

“சடாரென விழுந்த செருப்புக்கால் எத்தில் மூக்கன் கண் முழித்தான். காவக்கார முத்தையா பாண்டியன் கையில் கம்புடன் நின்றார். அவக்தவக் கென்று எழுந்து கொண்டவன் கைகட்டிக் குனிந்து பவ்யமாகத் தலை குனிந்து நின்றான்”

**(25 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 6 வீதம்)**

**(4 × 6 = 24 மதிப்பெண்கள்)**

25. உங்கள் பள்ளி ஆரோக்கிய மன்றம் சார்பாக, ‘உடல் ஆரோக்கியம்’ குறித்த விழிப்புணர்வு முகாமில் பங்கேற்க வருகை தரவிருக்கும் திரு. முனைவர் கி. நாச்சிமுத்து அவர்களிடம் வினவுவதற்காக ஐந்து வினாக்கள் அடங்கிய வினாநிரல் தயார் செய்யுங்கள்.

26. ‘திரு. நாராயண குருவின் சமூகச் சீர்திருத்தப் பணிகள்’ என்ற தலைப்பில் சிறுகட்டுரை எழுதுங்கள்.

27. இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறிவியல் செய்திகள் குறித்த கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.

28. 'வலைத் தளங்களால் ஏற்படும் ஆபத்துகள்' என்ற தலைப்பில் தொலைக்காட்சி உரை தயார் செய்யுங்கள்.

29. 'கூத்துக்கலைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் நாளிதழில் வெளியிடுவதற்கான தலையங்கம் தயார் செய்யுங்கள்.

**(30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டுப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 8 வீதம்)**

**(2 × 8 = 16 மதிப்பெண்கள்)**

30. விவசாயிகள் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றுவதற்காக, 'தமிழ் இலக்கியங்களில் வேளாண்மைச் செய்திகள்' என்ற தலைப்பில் சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.

குறிப்புகள்:

★ திருக்குறளின் 'உழவு' அதிகாரம்

★ கம்பரின் – ஏர் எழுபது

★ மண்நேசம் சிறுகதைக் கருத்துகள்

31. உலகச் சுகாதார தினத்தை முன்னிட்டு நடைபெற விருக்கும் கருத்தரங்கில் பங்கேற்கும் பொருட்டு, 'இன்றைய உணவுப்பழக்கங்களும் நோய்களும், என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்புகள் :

★ துரித உணவுகள்

★ துரித உணவு வகைகள்

★ உடல் நலப் பிரச்சினைகள்

★ நவீன வாழ்க்கை முறை – மாற்றம் தேவை

32. கேரளக் கலை வடிவமான நங்கையர் கூத்தின் அமைப்பும் சிறப்பும்' என்ற தலைப்பில்

குறிப்புகள்:

- நங்கையர் கூத்தின் பெயர்காரணம்
- கூத்தும் சிலப்பதிகாரத் தொடர்பும்
- கூத்து நிகழ்த்தும் முறைகள்
- கூத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவுகள்